**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண்.600/2023</u>**

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 25–ம் நாள் செவ்வாய்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | சிவக்குமார் | தொழில் | : | கூட்டுறவு சங்கம் |
| த/பெ | கந்தசாமி | கிராமம் | : | சித்தராவுத்தன்பாளையம் |
| வயது | 54 | தாலுகா | : | தாராபுரம் |
| | | மாவட்டம் | : | திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவா சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை பொருத்து ஒருமுறை பாகப்பிரிவினை நடந்தது. மேற்படி பாகப்பிரிவினை 09.06.1973 ஆம் வருடம் நடந்தது. மேற்படி பாகப்பிரிவினையில் கருப்பண்ண கவுண்டர், ராமசாமி கவுண்டர், காளியப்பகவுண்டர் ஆகியோருக்கு பாகம் ஒதுக்கப்பட்டது. தாவா சொத்துக்களை பொறுத்து இரண்டு முறை பாகப்பிரிவினை நடந்தது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினையில் கருப்பண கவுண்டருக்கு G செடியூல் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டன. சர்வே எண். 365/1b ல் 1.52 ஏக்கர் 365/2 நிலத்தில் 0.10 ஏக்கர் சர்வே எண் 353/2 நிலத்தில் 2.20 ஏக்கர், தாராபுரம் கிராம புதிய காசா எண் 84/4 நிலத்தில் 0.68 சென்ட் ஒதுக்கப்பட்டன. மொத்த விஸ்தீரணம் 4.50 ஏக்கராகும். கருப்பண்ண கவுண்டருக்கு முதல் பிரதிவாதி ஒரே மகன் என்று சொன்னால் சரிதான். அவர்தான் நிலங்களை பராமரித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல அனைவரும் பராமரித்து வந்தோம். என்னுடைய தாத்தா உயிரோடு இருக்கும்போது என்னுடைய அம்மாவுக்கும்

அவரது சகோதரி 2–ம் பிரதிவாதிக்கும் இடையில் ஒரு வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

2. என்னுடைய தாத்தா உயிரோடு இருக்கும்போது என்னுடைய தாயாருக்கும் அவருடைய சகோதரிக்கும் தலா 30 பவுன் நகை போட்டு திருமணம் செய்து வைத்தார் என்று சொன்னால் என்னுடைய தாத்தா தான் திருமணம் செய்து வைத்தார் ஆனால் எவ்வளவு நகை போட்டார் என்று தெரியவில்லை. மேற்படி 30 பவுன் நகை வைத்து தான் தாராபுரத்தில் 1977 ஆம் ஆண்டு வருடம் 2 ஏக்கர் 50 சென்ட் நிலம் கிரையம் பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் என்னுடைய தாயார் பெயர் எந்த ஆவணங்களிலும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வாரிசு சான்றிதழில் என்னுடைய தாயார் பெயர் உள்ளது. என்னுடைய தாயார் இறந்த பிறகு நான் வாரிசு சான்றிதழ் பெறவில்லை. ரத்தினசாமி பெயரில் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் ரத்து செய்யப்பட்ட பிறகு நான் வாரிசு சான்றிதழ் கோரி வட்டாட்சியரிடம் மனு செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்களில் எனக்கு எந்த விதமான பாகமும் கொடுக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

3. என்னுடைய தந்தையார் இறந்த பிறகு நான் என்னுடைய தாத்தா மற்றும் பாட்டி வீட்டில் இருந்தேன் அப்போது 1–ம் பிரதிவாதி உடன் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல அவர் தனியாக இருந்தார். 2–ம் பிரதிவாதிக்கு எதிராக நான் ஏதேனும் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. 1–ம் பிரதிவாதி என்னுடைய கல்லூரி படிப்பு செலவு மற்றும் திருமணச் செலவு என மொத்தமாக ரூபாய் 10 லட்சம் செலவு செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது சொந்த வீட்டில் இருக்கிறேன் அது கட்டி இரண்டு வருடங்கள் ஆகிறது. மேற்படி வீட்டை நான் IDB வங்கியில் கடன் பெற்று வாங்கினேன். என்னுடைய தாயார் 1977 ஆம் வருடம் வாங்கிய 2 ½ ஏக்கர் நிலத்தை விற்று தான் மேற்படி வீட்டை நான் கட்டியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து 1–ம் பிரதிவாதியை வஞ்சிக்கும்

நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல என்னுடைய தாயாருக்கு ஏற்கனவே பாகப்பிரிவினை மூலம் சொத்து பிரிக்கப்பட்டு விட்டதால் நான் தாவா சொத்துகளில் எந்தவிதமான பாகமும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**2–ம் பிரதிவாதி தரப்பில் கால அவகாசம் கோரப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.25 19:27:09 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.